**முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.**

2026–ம் ஆண்டு **ஜனவரி** மாதம் 19–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன்,பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**அ.வ.எண்.91/2022**

**வா.சா:–1 (மகாலட்சுமி)**

**குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்):–**

தாவா சொத்து எனது தகப்பனார் சுயமாக சம்பாதித்த சொத்து என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.1 ஆவணமானது சின்னதம்பி என்பவர் தாவா சொத்தை சுயமாக சம்பாதித்தார் என்பதை காட்டுவதற்கான ஆவணம் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.2 ஆவணமானது விஜயா என்பவர் தாவா சொத்தில் அவருக்கு பங்குரிமை எதுவும் வேண்டாமென்று எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் சரியல்ல. விஜயா என்பவர் எனது தாயார் என்றால் சரிதான். எனது தகப்பனார் சின்னதம்பியின் முதல் மனைவி தான் விஜயா என்றால் சரிதான். விஜயா என்பவர் சின்னதம்பிக்கு விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்த பிறகு அவருடன் சேர்ந்து வாழவில்லையென்றால் சரியல்ல. விஜயா என்பவர் பெயரில் தாக்கல் செய்யப்பட்ட குடும்ப அட்டையில் கணவர் பெயர் சின்னதம்பி என்று குறிப்பிடவில்லையென்றால் சரியல்ல. வழக்கில் எனது அப்பா பெயர் சின்னதம்பி (எ) பாலசுப்பிரமணி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றும், அதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லையென்றால் சரியல்ல. என் அப்பா பெயர் சின்னதம்பி என்றும், அவரை பாலசுப்பிரமணி என்று அழைக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.12 எனது தாயார் விஜயா என்பவர் இறப்பு சான்றில் கணவர் பெயர் குறிப்பிடவில்லையென்றால் சரியல்ல. எனது தாயார் சின்னதம்பி பெயருக்கு வா.த.சா.ஆ.2 ஆவணப்படி விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்த பிறகு அவர் சின்னதம்பியுடன் சேர்ந்து வாழவில்லையென்றால் சரியல்ல. சின்னதம்பி என்பவரது இறப்பு சான்று வா.த.சா.ஆ.6 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இறப்பு சான்றில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் தான் சின்னதம்பி காலமாகும் வரை இருந்து வந்தார் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.3 மற்றும் வா.த.சா.ஆ.4 ஆவணங்களில் என் தாயார் சின்னதம்பி என்பவரது முகவரியில் தான் குடியிருந்து வந்தார் என்று

குறிப்பிடவில்லையென்றால் சரியல்ல.வா.த.சா.ஆ.3 மற்றும் வா.த.சா.ஆ.4 ஆவணங்களில் கண்டுள்ள முகவரிகளானது வேறு முகவரியில் குடியிருந்ததாகத்தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வில்லங்க சான்று பெற்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அது வா.த.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.த.சா.ஆ.11 தாவா சொத்திற்கு சம்மந்தப்பட்ட ஆவணம் இல்லையென்றும், தாவா சொத்திற்கு சம்மந்தமில்லாத வேறு சர்வே எண் குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.170–க்கு வில்லங்க சான்று பெற்று தாக்கல் செய்யப்படவில்லையென்றால் சரியல்ல. 04.06.2018 தேதியில் தாவா சொத்துக்களை பொருத்து 1 மற்றும் 3 பிரதிவாதிகள் பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. என் அப்பா இறந்த பின் ஒரு வருடம் கழித்து தெரிந்துகொண்டேன். என் அப்பா 23.12.2020–ம் வருடம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அப்பா இறந்த பிறகு ஒரு வருடம் கழித்து சாமி கும்பிட்டபோது தான் 1, 3 பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்த விவரம் தெரிந்துகொண்டேன். 04.02.2022 தேதியில் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் மூலமாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பில் எங்களுக்கு தெரியாமல் 1, 3 பிரதிவாதிகள் பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்ட விவரம் தெரியவந்ததாக சொல்லப்படவில்லையென்றால் சரியல்ல. அந்த வழக்கை தாக்கல் செய்தபோதும் செட்டில்மெண்ட் ஆவணத்தை பற்றி எதுவும் சொல்லப்படவில்லையென்றால் சரிதான். ஏற்கனவே 1, 3 பிரதிவாதிகள் பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்த விவரம் எனக்கு தெரியுமென்பதால் தான் செட்டில்மெண்ட் ஆவணத்தை பற்றிய விவரத்தை வழக்கில் தெரியப்படுத்தவில்லையென்றால் சரியல்ல. எல்லா விவரமும் தெரிந்துகொண்டு 4 வருடம் கழித்து செட்டில்மெண்ட் ஆவணத்தை பற்றிய விவரம் தெரியாது என்று பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பாகப்பிரிவினை நாங்கள் கோரமுடியாது என்றால் சரியல்ல. 04.06.2018 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம்

செல்லாது என்று அறிவிக்கக்கோரி பரிகாரமும் கோரமுடியாது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Sd/-M.Ramachandran

| |
|---|
| Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct. |
| Sd/.M.Ramachandran,<br>Principal Subordinate Judge, Tiruchengode. |